1971 ஜூன் 30]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கணக்குகளைக் கண்டு பிடிக்க அப்படிப்பட்ட குழுக்களை ஏற்படுத்தினல், அரசியல் கண்ணேட்டம் என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாக்கப்படுவோம்.

திரு. கே. ஏ. வகாப் : திடீர் சோதனையின் மூலம், சில நேரங்களில், தவறு செய்யாத வியாபாரிகள்கூட பலவிதமான துன்பங்களுக்கு ஆளாகிறுர்கள் என்ற பரவலான எண்ணம் வியாபாரிகளிடையே இருக்கிறது. தவறு செய்யாத வியாபாரி களுக்குத் துன்பம் வராமல் காக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : துர்பாக்கியவசமாக வரி ஏய்ப்பைக் கண்டுபிடிக்கச் சோதனை செய்ய அதிகாரிகள் போகுமிடங்களில், புதையல் கிடைப்பதுபோல் கணக்குகள் அகப்படுகின்றன.

THIRU K. M. SUBRAMANIAM : When the sales tax exemption limit has been fixed at Rs. 15,000—now it has been increased to Rs. 25,000—when such exemption is given, is it not a fact that after a dealer completes Rs. 25,000 worth of sales, he deals in some other names in the same place or even before completing the limit he gives bills in two or three names thus evading sales tax?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அப்படிச் செய்கின்ற வியாபாரிகள் இருப்பார்களானுல் கனம் அங்கத்தினர் தயவு செய்து அரசாங்கத்திற்குத் தகவல் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். அதன் பிறகு உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : திடீர் சோதனை செய்யும் விசேஷ அதிகாரிகள்—நான் அறிந்த வரையில்—வெகு திறமையாகப் பணியாற்றி அதிகமாகப் பணத்தை எடுத்திருக்கிறுர்கள் என்பதை அறிவேன். அம்மாதிரி திடீர் சோதனை மூலமாக சில முக்கியமான இடங்களில் தவறுகளைக் கண்டுபிடித்து, வரி ஏய்ப்புப் பணத்தை வசூலிக்கும் அதிகாரிகளுக்குச் சன்மானம் வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : சன்மானம் வழங்கப் படுகிறது என்று கருதுகிறேன். தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரலாம்.

விற்பனை வரி விலக்கு

* 91 வினு—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடை யளிப்பாரா—

சிறு வியாபாரிகளுக்கு ஐம்பது ஆயிரம் ரூபாய் வரை விற்பனை வரி விலக்கு அளிக்கும் திட்டம் அரசிடம் உண்டா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது போன்ற கோரிக்கைகள் வியாபாரிகளிடமிருந்து வந்துள்ளன. இவை அரசின் பரிசீலனையிலுள்ளன. இந்த பதில், மூலக் கேள்வி கேட்ட

நேரத்தில் தயாரிக்கப்பட்டதாகும். ஆனல், நேற்று முன்தினம் சட்டமன்றத்தில் சொல்லியிருக்கிறேன், இந்த உச்ச வரம்பு எந்த அளவுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்று. உச்ச வரம்பை 15,000 ரூபாயிலிருந்து 25,000 ரூபாய் வரையும், கம்பவுண்டிங்கை 75,000 ரூபாயிலிருந்து ஒரு இலட்சம் ரூபாயாகவும் மாற்றியிருக்கிறோம்.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, பலமுனை விற்பனை வரியின் காரணமாக வியாபாரிகளுக்கும் வரி வசூலிப்பவர்களுக்கும் சிரமங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, ஒருமுனை விற்பனை வரி விதிப்பதுபற்றி அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : எந்தெந்தப் பொருட்களை ஒருமுனை வரிக்குக் கொண்டுவர முடியுமோ அவைகளை மாற்றிக் கொண்டிருக்கிறோம். ஆனல், எல்லாப் பொருள்களையும் ஒருமுனை விற்பனை வரிக்குக் கொண்டுவர முடியாது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஏனென்றால், பலமுனை விற்பனை வரி என்றால், எங்காவது ஒரு முனையில் விடப்பட்டுவிடுமானல், இன்னொரு முனையில் கண்டுபிடிக்கப்பட்டுவிடும். ஒருமுனை வரி என்று வைத்து விட்டால், அந்த ஒரு இடத்தில் வரி ஏய்க்கப் பட்டுவிட்டால் அரசாங்கத்திற்கு வரவேண்டிய வரி வராமல் பெரிய இழப்பு ஏற்பட்டுவிடும்.

திரு. மா. பா. சாரதி : உச்ச வரம்பை ரூ. 15,000-இலிருந்து ரூ. 25,000 வரை இப்பொழுது உயர்த்தியுள்ளதை, வியாபாரிகள் 50,000 ரூபாயாக உயர்த்தி கம்பவுண்டிங் செய்து வசூலிக்கவேண்டும் என்று ஏகோபித்த குரலில் எடுத்துச் சொல்லியும் அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆகவே, 25,000 ரூபாய் என்றிருப்பதை 50,000 ரூபாயாக்க அமைச்சரவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்புதான் 25,000 ரூபாய் என்று உயர்த்தப் பட்டது. ஒரு இலட்ச ரூபாயாகக்கூட உயர்த்தினல் வியாபாரிகள் மகிழ்ச்சி அடையக்கூடும். வரியே இல்லையென்றால் அவர்கள் இன்னும் மகிழ்ச்சி அடையக்கூடும். ஆனல், அரசாங்க நிதி நிலையைப் பொறுத்து, எந்த அளவுக்கு நிர்ணயிக்கலாம் என்பதைப் பார்த்து அரசாங்கம் நிர்ணயித்துள்ளது. 25,000 ரூபாய்க்கு மேல் வியாபாரம் செய்கிறவர்களை சிறு வியாபாரிகள் என்று கருதுவதற்கு இயலாது.

திரு. க. நாகராஜன் : வரி ஏய்ப்பு செய்யாமல் ஒழுங்காக வியாபாரம் நடத்தக்கூடிய வியாபாரிகளை ஊக்குவிக்கும் முறை குறித்துப் பரிசீலிக்கும் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அப்படி ஒன்றும் இல்லை.